අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/03/53/02/15/පොදු

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.03.22

உள்ளக சுற்றுநிருப இலக்கம் : 11/2024

பணிப்பாளர் நாயகம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை,
பணிப்பாளர் நாயகம், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு,
உப வேந்தர், சமுத்திரப் பல்கைக்கழகம்

**உயர் தர தொழிற் பாடத்துறை மாணவர்களது தொழிற் பயிற்சிச் செயற்பாடுளுக்கு முன்னுரிமையளித்து செயற்படல்**

NVQ 04 மட்ட தொழிற் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக உயர் தர தொழிற் பாடத் துறையின் தரம் 13 இல் தொழிற் பயிற்சி நிறுவனங்களுடன் இணைப்புச் செய்யப்படும் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல், தாமதமின்றி அவர்களுக்கான NVQ 04 சான்றிதழ்களை வழங்குவதானது, கல்வி அமைச்சின் கீழுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முக்கியமானதொரு பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

2. 2024ம் ஆண்டு முதல் இப் பாடத் துறையை மேலும் மேம்படுத்தி, மாணவர்களூடாக இதனூடாக கிடைக்கும் வாய்ப்புக்களை மேலும் விரிவுபடுத்த வேண்டும். இதற்காக கீழே தரப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும்.

2.1. **தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கான ஆலோசனைகள்**

i. NVQ 04 பாடநெறிகளுக்கு வருடாந்தம் மாணவர்களை அனுமதிக்கும் போது, இப் பாடத்துறைக்குரிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

ii. மாணவர்களது பயிற்சிகளை முறையாகவும், பயிற்சிக் கால வரையறைகளுக்கு அமைவாகவும் நடாத்துதல் வேண்டும். அவ்வாறே, நிலையத்தில் பயிற்சி/ நிறுவனங்களில் குறுகிய கால பயிற்சி போன்றனவற்றை தாமதமின்றி நிறைவு செய்தல் வேண்டும்.

iii. பயிற்சியை நிறைவு செய்யும் மாணவர்களை தொழில் நிலையம் ஒன்றில் பயிற்சிக்காக இணைப்பதற்கும், குறித்த பயிற்சி முறையாக இடம்பெறுகின்றது என்பதை கண்காணித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.



CamScanner

iv. பயிற்சியை நிறைவு செய்யும் மாணவர்களுக்குரிய மதிப்பீடுகளை மேற்கொண்டு, சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடுகளையும் தாமதமின்றி செய்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

v. தொழிற் பயிற்சி நிலையங்களின் செயலாற்றுகையை கண்காணிப்பதற்காக, இப் பாடத்துறையினூடாக அனுப்பபட்ட மாணவர்களுள் நிலையத்தினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சதவீதம் மற்றும் NVQ 04 மட்டத்தை அடைந்துள்ள சதவீதம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

2.2. **மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவிற்கான ஆலோசனைகள்**

i. பயிற்சியை நிறைவு செய்யும் இப் பாடத்துறைக்குரிய மாணவர்களை மதிப்பீட்டுக்குட்படுத்தி சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடுகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

ii. மாணவர் குழுவினரை பதிவு செய்தல் முதல் சான்றிதழ் வழங்கும் வரை, இம் மாணவர்களுக்குரிய பயிற்சிகளை முறையாகவும், பயிற்சிக் கால வரையறைகளுக்கு அமைவாகவும் நடாத்துவதற்காக நிறுவனங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், வழிகாட்டல்களை வழங்கவும் வேண்டும்.

iii. *TVEC* தரவு முறைமையில் இம் மாணவர்களது தரவுகளை வேறுபடுத்தி பேண வேண்டும் என்பதுடன், பொறுப்பான தரப்பினருக்கு அவற்றை வழங்கவும் வேண்டும்.

iv. இத் தகவல்கள் சார்ந்த அறிக்கைகளை பரிசோதிப்பதற்காக TVEC தரவுத் தளத்திற்கான பிரவேச அனுமதியை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டும்.

வசந்தா பெரேரா
செயலாளர்



CamScanner